Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




மலர் 13 | ஷவ்வால் 23 | கார்த்திகை 26 | ஞாயிற்றுக்கிழமை | (12—12—71) | இதழ் 301

# டாக்காவின் தலைவிதி ஊசலாடுகிறது!

## பாக். படைகள் வெளியேற ஐ. நா.விடம் உதவி!!

புதுடில்லி, டிச. 11

கிழக்குப்பாகிஸ்தானின் தலைநகரான டாக்காவை இந்தியப்படைகள் பூரணமாகக் கைப்பற்றிவிட்டதாக எந்நேரத்திலும் அறிவிக்கப்படலாம்.

போர் முனையிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி டாக்காவை அடுத்துள்ள வடபகுதியில் பல இடங்கள் இந்தியாவின் கைகளில் இன்று சிக்கிவிட்டதாகவும், 1800க்கு மேற்பட்ட பாக். துருப்புகள் இன்று சரணடைந்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

பங்களாதேஷி (கி. பாகிஸ்தான்)லுள்ள மேற்குப்பாகிஸ்தான் படைகளை அங்கிருந்து பாதுகாப்புடன் வெளியேறுவதற்கு அதன் தளபதி ஐ.நா. விடம் உதவிகோரியிருப்பதாக ராய்ட்டர் செய்தி ஒன்று கூறுகிறது.

அதேநேரத்தில் இப்பகுதியிலுள்ள ஜெசூர் நகர் தம்வசம் இருப்பதாகவும் டாக்காவை சுற்றியுள்ள பகுதியில் அமைதி நிலவுவதாகவும் ராவல்பிண்டியில் பாகிஸ்தான் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### 'இனித்தப்பமுடியாது; சரணடையுங்கள்!'

புதுடில்லி, டிச. 11

"இனித் தப்பமுடியாது! மீண்டும் மீண்டும் சொல்கிறேன். மேற்குப் பாகிஸ்தானிலிருந்து உதவிவரும் என்று கனவு காணுகிறீர்கள். கடலும், வானமும் முற்றாக அடைக்கப்பட்டுவிட்டது. உங்கள்மீது பாய்ந்து முற்றுமுழுதாக அழிக்க எமது படைகள் தயாராகிவிட்டன. அப்பாவித் துருப்புகள் அழியப்போகிறார்கள். கடைசி எச்சரிக்கை சரணடையுங்கள்!"

பங்களாதேஷிலுள்ள பாகிஸ்தான் படையைச் சேர்ந்த தளபதி ஹாரிமன் அலிக்கு இன்று கடைசித்

(12-ம் பக்கம் பார்க்க)

### 48 மணி நேரத்தில் டாக்கா வீழ்ச்சியுறும்

புதுடில்லி. டிச. 11

பங்களாதேஷிலுள்ள பாகிஸ்தான் விமானப்படை தளபதிக்கும் மேற்குப் பாகிஸ்தான் விமானப்படை தலைமைக் காரியாலய அதிகாரிக்குமிடையில் நடந்த தொலைபேசி பேச்சுவார்த்தைகளை நேற்று இந்தியா பதிவு செய்துள்ளதாக இந்திய செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இந்திய செய்திச்சேவையின் 'தளபதி இனும், தனது சிரேஷ்ட அதிகாரிக்கு "48 மணித்தியாலத்திற்குள் அவர்கள் (இந்தியர்கள்) டாக்காவை கைப்பற்றி விடுவார்கள் என நான் நினைக்கிறேன்" என்று தொலைபேசியில் சொன்னதாக கூறப்பட்டிருக்கிறது.

அச்செய்தியின்படி தளபதி இனும் மேலும் தொடர்கிறார். "ரகசிய [illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவை அடுத்துள்ள வட பகுதியில் இந்திய விமானத் தாக்குதலின் இறங்கியுள்ளது. கமால்பூர் என்ற அரணைக் கைப்பற்றியதுடன், 600 துருப்புகளைச் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளனர். 10 க்கு மேற்பட்ட இடங்களை டாக்காவில் பிடித்துவிட்டதாக அறிவிக்கிறது.

வெவ்வேறு நாட்டு கப்பல்கள் போன்று பாகிஸ்தான் கப்பல்கள் வருகின்றனவா என்பதை மிகவும் எச்சரிக்கையாகப் பரிசோதனை செய்துவருவதாகப் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காஷ்மீரின் எல்லைகளிலிருந்து ஓர் அங்குலம்தானும் பாகிஸ்தான் படைகள் அடியெடுத்து வைக்காதபடி பாக். படையின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்துவிட்டதாக இந்தியா கூறுகிறது.

கட்ச் அரங்கில் எதிரிகளை முற்றாக ஒழித்துவிட்டதாக பாரதப்படை கூறுகிறது.

சம் பகுதியில் நடந்த கடும் சண்டையில் பாகிஸ்தானின் 7 டாங்கிகளை இன்று நாசமாக்கிவிட்டதாக இந்தியா அறிவிக்கிறது.

### சம் பகுதியில் நிலைமை இந்தியாவுக்குச் சாதகம்

டாக்காவை நோக்கி இந்தியப் படைகள் விரைந்து கொண்டிருப்பதாகவும், பாகிஸ்தான் படையினர் சரணடையாவிட்டால் அவர்கள் உயிருடன் திரும்பமுடியாதென்றும் அவர்கள் வெளிச் செல்வதற்கான பாதைகள் யாவும் அடைக்கப்பட்டுவிட்டதாகவும் இந்தியா தெரிவிக்கும் அதே வேளையில் இப்பகுதிகளில் இருக்கும் மேற்குப் பாகிஸ்தான் படையினர் பாதுகாப்புடன் வெளிச்செல்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை அங்குள்ள பாகிஸ்தான் படைத் தளபதி கோரியிருப்பதாக ராய்ட்டர் செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்சரஸ்சில் சண்டிக் கடுமையான சண்டைக்குப் பின் பாகிஸ்தான் இராணுவத்தை முறியடித்து ஆற்றின் மறுபக்கத்திற்கு பின்வாங்கச் செய்திருப்பதாகவும், சம் பகுதியில் பாகிஸ்தான் படைகளுக்கு பெருத்த சேதம் விளைவித்திருப்பதாகவும் நேற்று நள்ளிரவுக்குப்பின் இந்தியாவுக்குச் சாதகமான நிலைமை திரும்பியிருப்பதாகவும் இந்தியாவின் [illegible] நிலைமை பற்றிய அறிக்கை தெரிவிக்கிறது


### மரண அறிவித்தல்

க. இளையாச்சி

அச்சுவேலியைச் சேர்ந்த பெரியதம்பி கப்பையாவின் அன்புப் பாரியார் இளையாச்சி காலமாகிவிட்டார். இவர் சாவகச்சேரி லொறி உரிமையாளரும் யுனிவேர்ஸல் தேயிலைக் கம்பெனி விதானத்தின் முன்னாள் வியாபாரப் பிரதிநிதியுமாகிய க. கணபதிப்பிள்ளை, செல்லம்மா செல்லமணி, இளையதம்பி மகேஸ்வரி, சந்தசாமி குணவதி, அமிர்தலிங்கம் புவனேஸ்வரி, வைரமுத்து பூபதி, சண்முகராசா இராசேஸ்வரி ஆகியோரின் தாயாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியை சாவகச்சேரி, கச்சாய் வீதியில் 12-12-71 இன்று சாயந்தரம் 3 மணிக்கு நடைபெறும்.

தகவல்: க. சண்முகராசா.

8308


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் யுத்தம்:

## வல்லரசுகள் திட்டம்

கே. பி. ஹரன்

ஆசியாக்காரரும் ஆசியாக்காரரும் அடித்துக் கொள்ளவேண்டும் என்று சில வல்லரசுகள் போட்ட திட்டம் நிறைவேறி வருகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் சென்ற பத்து நாட்களாக தற்கொலை யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. வல்லரசுகளுக்கு ஆயுத விற்பனையால் பெருத்தலாபம். புதிதாக விடுதலை அடைந்த இந்திய பாகிஸ்தான் நாடுகளின் அபிவிருத்தி இந்த யுத்தத்தால் பெரும் நாசம் அடைந்து வருகின்றன. உயிர்ச்சேதங்கள் கொஞ்சமல்ல.

யுத்தம் நீடிக்கவேண்டுமென்றும் நீடித்தால் தான் தங்கள் ஆயுதங்கள் அதிகம் விற்பனையாகி அதிலாபம் கிடைக்குமென்றும் சில வல்லரசுகள் திட்டம்போட்டு காரியங்கள் செய்கின்றன. 'ஒரே அடியில் இரண்டு' என்பது போல் புதிதாக சுதந்தரமடைந்த ஆசிய நாடுகள் தற்கொலை யுத்தத்தில் ஈடுபடுமாயின், வல்லரசுகளுக்கு கைத்தொழில் மார்க்கெட் போட்டிகள் குறையும். முதல் இரண்டு உலக மகாயுத்தங்களுக்கும் அடிப்படை காரணம் வல்லரசுகளிடையே ஏற்பட்ட வர்த்தக, கைத்தொழிற் போட்டிகளே என்பர். விடுதலையடைந்த சென்ற 24 ஆண்டுகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் கைத்தொழில் துறைகளில் முன்னேறி ஏழ்மையை எதிர்க்கலாயின.

இந்த முன்னேற்றம் சில வல்லரசுகளுக்குக் கவலை அளித்திருப்பின் அதிசயிப்பதிற்கில்லை. இப்போது இவ்விரு நாடுகளும் சண்டையிட்டுக் கொண்டு நாசமடைந்து வருவதைக்காண, அவ்வல்லரசுகளின் கவலைகள் குறைக்கூடும்!

24 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு பிரிட்டன் அரசியல் சுதந்தரத்தை அளிக்கையில் ஒரு முக்கிய நிபந்தனையைப் போட்டது.

சமய அடிப்படையில் நாட்டை இரண்டாகப் பிரிவினை செய்ய ஒப்புக்கொண்டால்தான் சுதந்திரம் அளிக்க முடியுமென்று கூறியது. நாடு இரண்டுபட்டால் இரு பகுதிகளும் தற்கொலைச் சண்டைகளில் ஈடுபட்டு, அமைதிகெட்டு, நாசமடையுமென்பதை மகாத்மா காந்தி கண்டார். வல்லரசுகளின் மனம் அவருக்கு நன்கு தெரியும். ஆகவே பிரிவினைக்கு அவர் சம்மதிக்கவில்லை. ஆனால் ராஜாஜி முதலிய தலைவர்கள் எப்படியாவது சுதந்திரம் கிடைத்தால் போதும் என்ற ஆவலில் பிரிவினைக்கு ஒப்புக்கொண்டார்கள்.

1947-ம் வருடம் பிரிவினை ஏற்பட்டது முதல் இருநாடுகளுக்கும் நல்லுறவில்லை. பிரிவினை ஏற்பட்ட சமயத்தில் லட்சக்கணக்கான இந்துக்குடும்பங்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகவந்தன. இந்தியாவிலிருந்தும் லட்சக்கணக்கான முஸ்லீம் குடும்பங்கள் பாகிஸ்தானுக்கு அகதிகளாகச் சென்றன. இதனால் அச்சமயம் இருதேச மக்களில் பலருக்கும் சொல்ல முடியாத அவதிகளேற்பட்டன. ஆசியாக்காரரும் ஆசியாக்காரரும் அடித்துக்கொண்டார்கள் அகதிகள் பிரச்னை அப்போதே ஏற்பட்டது தான்.

அகதிகளாக நாடுவிட்டு பரதேசம் வந்தவர்கள் எல்லாரும் திரும்ப தங்கள் பழைய இடங்களுக்குச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும், அதுவே மனிதாபிமான முறையில், இந்த மனிதப்பிரச்னையைத் தீர்க்க சரியான வழி என்று மகாத்மாகாந்தி கூறினார். ஆனால் அவர் கூறியதற்கு நேர்மாறாக, அகதிகள் பிரச்னை இப்போது பலமடங்கு அதிகரித்துள்ளது.

கிழக்கு வங்காளத்திலிருந்து சுமார் ஒருகோடிப்பேர் அகதிகளாக ஓடிவந்திருப்பதைப்பார்க்க மகாத்மாவின் மனம் என்னபாடுபடுமோ!

அன்று ஏற்பட்ட அகதிகள் பிரச்னைக்கும் இப்போதுள்ள அகதிகள் பிரச்னைக்கும் ஒரே ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அன்று பாகிஸ்தானிலிருந்து இந்துக்களும் இந்தியாவிலிருந்து முஸ்லிம்களும் அகதிகளாக வெளியேறினர். ஆனால் இப்போதோ, கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும் மதவேற்றுமையின்றி அகதிகளாக வந்திருக்கிறார்கள். இதே சமயம் இந்தியாவிலிருந்து ஒருவரும் அகதிகளாக பாகிஸ்தானுக்குச் செல்லவேண்டிய ஏற்படாத முறையில் அங்கு சமய, சமூக அமைதி காக்கப்பட்டுள்ளது.

திடீரென ஒரு கோடி மக்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்து அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள பிரச்னைதான் இன்றைய இந்திய-பாகிஸ்தான் சண்டைக்கு முக்கிய காரணமாகும். இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஒரு வழி பிறக்கச் செய்யவே சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இப்போது வந்துள்ள அகதிகளை மட்டுமல்ல ஏற்கெனவே அகதியாகி இரு நாடுகளிலும் புகுந்துள்ளவர்களின் மனிதப் பிரச்னையும் காந்திமா கூறியது போல் தீரவேண்டும்.

யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்பதில் ஐக்கிய நாடுகள் சபை கவலைகொண்டு பெருவாரியான வாக்குகளால் அத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது மிகவும் நல்லது. ஆனால் யுத்தத்தின் அடிப்படைக் காரணமான அகதிகளின் பிரச்னையைத் தீர்க்க அந்தச் சபை எவ்வித முயற்சியையும் செய்யாதவரை அத்தீர்மானத்தால் என்ன பலன் ஏற்பட முடியும்? அகதிகளின் பிரச்னை மனிதப் பிரச்னை. அதைத் தீர்ப்பதற்காக ஐ. நா. சபை விசேஷ முயற்சி ஏதும் செய்யுமா? யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்படவேண்டுமென்ற உண்மை விருப்பம் வல்லரசுகளுக்கு உண்டா? அப்படியாயின் இந்த அகதிகளின் பிரச்னையை, மனிதாபிமானத்துடன் தீர்க்க அவைகள் தக்க முயற்சி எடுக்க வேண்டும்.

சென்றமுறை நடந்த யுத்தத்தில் ரஷ்யா, தாஷ்கண்டில் இரு நாடுகளையும் அழைத்துச் சமாதானம் செய்து வைத்தது. ஆனால் இம்முறை இரு நாடுகளுக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடிய வல்லரசு ஒன்று கூட இல்லை. ரஷ்யா இந்

(12-ம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. தீர்மானம் நல்ல பலன் தருமா?

— அலுவலக எழுத்தாளர் —

இந்திய— பாகிஸ்தான் பிரிவினையேற்பட்டு இன்று 25 வருடங்கள் ஆகின்றன. இந்த நீண்டகால பிரிவினைக்குப்பின் இவ்விரு நாடுகளும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருக்க முடியாத நிலையை இன்றைய சம்பவங்கள் நிரூபித்துவிட்டன. 1947-ம் ஆண்டு இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தும் பாகிஸ்தான் பிரிவினையும் ஏற்பட்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்க உதவிய அண்ணல் காந்தி சுதந்திரம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடையவில்லை. அன்றைய தினம் அவர் தனிமையை நாடித் தனது ராட்டையில் நூலை நூற்றுக்கொண்டிருந்தார். அந்த நிலையில் அவர் மிக வருத்தத்துடன் வகுப்புவாதப் பிரச்னையைப் பிரிவினை ஒருபோதும் தீர்த்துவைக்காது எனக் கூறினார், தீர்க்கதரிசனமான இந்தக் கூற்றை அன்றைய நிலையில் ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ஆனால் இன்று அந்த மகாத்மாவின் கூற்று எத்தனை உண்மையாய்ந்தது என்பதை ஒவ்வொருவரும் அறியக் கூடியதாகவிருக்கிறது. கிழக்குப் பாகிஸ்தான் தனக்குச் சுதந்திரம்வேண்டி நிற்பதால் பாகிஸ்தான் தனக்குள்ளேயே ஒன்றுபட்டு அமைதியாக இருக்க முடியவில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள விரோதம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆண்டுகளாக அது வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதற்கு ஒரு தரப்பைமட்டும் குற்றம்சாட்டுவதில் நியாயமில்லை- காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா கூட புத்திசாலித்தனமாக நடந்து நல்லதொரு தீர்ப்புக்கு வந்தது என்று கூறிவிட முடியாது. இவ்வாறு வளர்ந்துகொண்டே வந்த இந்த துரதிருஷ்டவசமான பிரச்னைக்கும் வரலாறுதான் தீர்ப்புக் கூறவேண்டும். இந்தியாதான் கிழக்கு வங்கப் பிரச்னையைத் தூண்டிவிட்டது என்று கூறுவதில் அர்த்தமற்றதும் அநியாயமானதுமாகும். ஒரு கோடி கிழக்கு வங்க அகதிகளின் வருகையால் அவர்களைச் சமாளிக்க மிகக் கஷ்டமுற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியாமீது இந்தப் பழியைச் சுமத்துவது மோசமானதொரு செயலாகும். மேலும் இந்தப் பிரச்னையில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் இந்தியாவுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கும் முகமாகப் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேற்கத்திய நாடுகளுக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்தினார். அதிபர் நிக்ஸனுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர் வங்கப் பிரச்னைக்கு நடுநிலைமையாளராகவிருந்து சுமுகமாகத் தீர்க்குமாறு கோரியிருந்தார். ஆனால் நிக்ஸன் ராஜதந்திரியாகவிருந்து சுமுகமான தீர்வுக்குச் செயல்படுவதற்குப் பதில் தந்திரமாக ஒரு பக்கச் சார்பாக நடந்துகொள்ளுகிறார். வல்லரசுகள் கிழக்கு வங்க விவகாரத்தில் நடந்துகொள்ளுகின்ற முறை மூன்றாவது உலக மகாயுத்தம் ஆசியப் பிராந்தியத்தில் மூளும் என நடுநிலைமை நாடுகள் எண்ணுவதற்கு இடமளித்துள்ளது.

சீனா பாகிஸ்தானுக்கு ஆதரவளித்துக்கொண்டிருக்கிறது. ரஷ்யா இந்தியாவுக்கு ஆதரவளித்துக்கொண்டிருக்கிறது. இந்த வேளையில் ஐ நா சபை போர் நிறுத்தத்தை இரு நாடுகளிடமும் கோருவது அர்த்தமற்றதொன்றாகும். இந்தக் கோரிக்கை சாத்தியமாகுமா? கிழக்கு வங்கப் பிரச்னையின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்துத் தீர்வு காணும்வரை இப்போர் நிறுத்தத்தால் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை. தற்போதைய நிலையில் இப் பிரச்னை பாகிஸ்தானின் பிரச்சனையல்ல. இந்தியாவிடம் தஞ்சம்புகுந்துள்ள 1 கோடி அகதிகளை உள்ளடக்கிய மனிதப் பிரச்னை. பங்களாதேஷ் என்ன மாதிரியிருக்கப்போகிறது? அந்நாட்டு மக்கள் வேண்டாமென ஒதுக்கும் ஆட்சியாளர்களை ஒதுக்குவது ஆமென பற்றிய ஒரு முடிவுக்கு ஐ. நா. நடவடிக்கை எடுக்காதவரை அது கொண்டு வந்துள்ள போர் நிறுத்தப் பிரேரணை பலனளிக்குமா என்பது சந்தேகமே. இவ்வேளையில் பாகிஸ்தானின் பழைய வரலாற்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருப்பதிலும் எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை.

'கிழக்கு வங்கத்தின் விடுதலைப் படையான 'முக்தி பஹினி' இந்தியப் படையைப் போன்றதே. இந்தியப் படைக்கும் இந்த 'முக்தி பஹினி'க்கும் எந்த வித வித்தியாசமுமில்லை. சகல நடவடிக்கைகளிலும் ஒன்றே இவ்வாறு அமெரிக்கா வங்க விடுதலைப் படையினைப்பற்றி கூறுகிறது. தற்போதைய போர் 'முக்தி பஹினி'யும் இந்தியப் படையும் வேறுபட்டவை என்பதை காட்டுகிறது 'முக்திபஹினி' தனித்துவம் வாய்ந்த தனக்கென ஒரு கொள்கையையுடைய ஒரு விடுதலை இயக்கம். உயிரைக் கொடுத்தும் கிழக்கு வங்க மக்களை விடுதலை செய்யவேண்டும் என்பதே இதன் முக்கிய குறிக்கோள்.

ஐ நா. இப் பிரச்னையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும். இதற்கு முதலில் செயலாளருக்கு கூடிய அதிகாரம் வழங்கவேண்டும். இந்த அதிகாரத்தைப் பாவித்து அவர் இப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட பாகிஸ்தான் கிழக்குப் பாகிஸ்தான் ஆகிய இரு பகுதிகளினதும் தலைவர்களைக் கூட்டி அவர்கள் கருத்தை ஆராய்ந்து இப் பிரச்னைக்கு இரு தரப்பினரும் கட்டுப்படத்தக்க ஒரு அடிப்படை விதி முறையில் தீர்வு காண வேண்டும். அகதிகள் பிரச்னை தீர்ந்து அவர்கள் தம் நாட்டுக்குத் திரும்பிவிட்டால் இந்தியா இந்த துன்பமான போரில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும்.

விற்பனையாகின்றது!

ஈழநாடு தினகுறிப்பு 1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★★ அருணாசல மகாத்மியம் ★★★

**யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்களில் ஒன்றுதான் திரு. ச. அருணாசலம் அவர்கள். திரு. சி. கணபதிப் பிள்ளை எழுதிய 'சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த திரு. ச. அருணாசலம்' என்னும் நூலில் திரு. அருணாசலத்தின் அருந்தொண்டுகள் பற்றிப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதிய அணிந்துரையிலிருந்தும், நூலாசிரியர் கூற்றுக்களிலிருந்தும் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. இன்று காரைநகரில் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.**

ஒருநாள் நாவலர் தலைமையூர் குமாரசாமி மனேஜர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களுடன் திரு. அருணாசல உபாத்தியாயர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டேன். உபாத்தியாயர் போனபின்புதான் மனேஜர் அவர்களை, 'அவர் யார்' என்று கேட்டேன். 'அவரா? அவரை இன்னும் அறியாயா? 'அவர்களுக்குப் பிறகு அருணாசலம் தான் இந்த நாட்டில் ஒருமனிதர் என்று அருணாசலம் அவர்களின் சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாகச் சொன்னார்கள். அவர்களென்று மனேஜர் அவர்கள் சொல்லுவது நாவலர் அவர்களை.

நாவலரையன்றி மற்றெவரையும் மதித்துப் பேசியறியாத மனேஜர் அவர்கள், அருணாசலம் அவர்களைப் பற்றி, 'நாவலருக்குப் பின் ஒரேயொரு மனிதர்' என்று வருணித்ததைக் கேட்டுத் தாமித்துப் போனேன். அருணாசலம் அவர்கள் இளமையில் அகப்படாது தப்பியது. மூப்பது வருடகாலம் சைவ உபாத்தியாயர்களை ஆக்கும் சைவாசிரிய கலாசாலை யொன்றைத் தாபிக்க அலைந்த அலைவுகளும், நல்லூர் மணியடிக்கும் போது 4½ மணிக்குத் தாமே தெருக்கதவைத் திறக்கும் போது அருணாசலம் அவர்களை நினைத்துக்கொண்டு திறப்பதும், பனிக்காலத்தில் காரைதீவிலிருந்து நடந்து வந்து தம்மைச் சந்திக்கும் பொழுது வாய்தலில் நெட்டூரக்கிக்கொண்டு காத்திருப்பதும் கோப்பாய் ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை அருணாசலம் அவர்களின் பேருழைப்பே என்பதும் பிறவுமான சரித்திரங்களையெல்லாம் அவர்களிடம் அறிந்தேன்.

பண்டிதமணி

**சி. கணபதிப்பிள்ளை**

அருணாசலம் அவர்களின் முப்பது வருட முயற்சி நாவலர் அவர்கள் முப்பது வருடத்துக்குமேலே செய்து வைத்த முயற்சியின் ஒரு பகுதியை ஓரளவுக்குப் பயன் செய்தற்குரிய தென்றே. சைவக் குழந்தைகள் இறங்கிய பள்ளிகளில் அறிவு சூனியமாகச் சடப்படுத்தப் படுவதை அருணாசலம் அவர்களால் சகிக்கமுடியவில்லையென்றே அப்பொழுது என்னால் அறிய முடியவில்லை. நான் எப்படி இளமையிற் சடப்படுத்தப்பட்டிருந்தேன் என்பதைக்கூட நான் நினைக்கவில்லை. எனக்குக் கிடைத்த வாய்ப்பை மகிழ் மடுத்திக் கொண்டிருப்பதே என் வேலையாயிருந்தது. இரண்டாம் ஆள் பற்றிய சிந்தனை எனக்கு வரவில்லை. கடவுள் தரவில்லை.

### எனது நாணம்

மனேஜர் அவர்கள் சொல்லும்போது, அருணாசலம் அவர்களை நான் தக்கவாறு மதிக்கவில்லையே என்ற நாணந்தான் என்பாற் குடியிருந்தது.

### தபோபலம்

1916-ம் ஆண்டு தொடக்கம் அருணாசல உபாத்தியாயரின் தவம் பலன் செய்யத் தொடங்கியது. சைவ உபாத்தியாயர்கள் உதயமானார்கள். அரைகுறை மதமாற்றக்காரர்களும் வெளிப்படைச் சைவர்களாய் அருணாசலம் அவர்களைத் தொடர்ந்தார்கள். பாதிரிமாருக்குப் புதிய தொடு தலைப்பிடி உண்டாயது.

### புதியதலையிடி

நாவலர் திட்டமிட்ட கற்றுவல்ல உபாத்தியாயர்களுக்கு, 'அன்சேட்டிவிரதத்' வழங்கி, தராதர பத்திர உபாத்தியாயர்களுக்குத் தலைமைப் பதவி வழங்கிய பாதிரிமாருக்கு, அவர்கள் கண்டவழியைத் திரு. அருணாசலம் அவர்கள் மேற்கொண்டதனுல், புதிய தலையிடி தோன்றி ஆருக்களையளிப்பதாயிற்று."

# ஊரார் பிள்ளைகளை.....

திரு. அருணாசலமவர்கள் ஊரெல்லாம் அலைந்தார் புதிய மாணவரைத் தேடிப்பிடித்தார். ஊண், உடை, புத்தகங்கள் உதவினார் பணம் சம்பாதிக்க வழி காட்டிடமாகவிருந்தார் சைவாசிரியர்களை உற்பத்தி செய்து சைவம்வளர வகை செய்தார் தம் மனைவி மக்களை நினைத்தாரில்லை 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்பார்கள் அதற்கொப்ப திரு அருணாசலமவர்கள் ஊரார் பிள்ளைகளை வளர்த்தார்கள் அவர் பிள்ளைகள் அநாதைகளாய்த் தாமே வளர்ந்தார்கள் பிறர் பிள்ளைகளை வளர்த்தது காரணமாய் அவர் ஆஸ்திகள் கடனில் மூழ்கின. 1920-ல் அவர் சிவபதமடைந்தபோது ரூ. 50,000 பெறுமதியான ஆதனங்கள் விலைபோயின. இப்போது அவை இருப்பின் ஒரு லட்சம் பெறுமதியாகலாம்.

இந்நாளில் பல செயல்கள் செய்யப்படுகின்றன. அதைச் செய்வோர் அதைச் செய்விப்போர் பொதுநலங்கருதிச் செய்வதில்லை. தம் பெயருக்கும் புகழுக்குமாகவே செய்கிறார்கள். திரு. அருணாசலமவர்கள் இச்செயலுக்கு நேர்விரோதமானவர்கள் அவர்கள் புகழுக்காகத் தொண்டு செய்யவில்லை. சைவத்தொண்டும் தமிழ்த்தொண்டுமே அவருயிர். அதற்காக 30 ஆண்டுகள் தமது ஆசிரியத் தொழிலை ஒழுங்காகச் செய்யாததும் தமது பெற்றோர் வழிவந்த, மனைவியாற் கொண்டுவரப்பட்ட ஆஸ்திகளைத் தமது பிள்ளைகளுக்கு விட்டுவைக்காது செலவு செய்ததும், இன்னல்களையும் அனுபவித்த வெற்றியும் கண்டார் சைவப் பெரியார்கள், நண்பர்கள். அவரின் கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை மாணவர்கள் அவரின் நிழற்படமெடுக்க விரும்பினார்கள், அவர் அதற்கு உடன்பட்டாரில்லை.

திரு அருணாசலமவர்கள் தோற்றுவித்த கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலையிலும் அதன் தொடர்பான கோப்பாய், திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிலும் கற்றுத் தேறிய பலர் சைவசிரியர்களாய் மாத்திரமல்லாது பண்டிதர்களாய்,

(11-ம் பக்கம் பார்க்க)

# ரசிகர்களுக்காக மழையில் நனைந்தார் எம். ஜி. ஆர்!



கூடும் மழை பெய்து அப்பொழுதுதான் கொஞ்சம் ஓய்ந்திருந்தது. 'சுகததாசா ஸ்ரேடியத்தை' நோக்கி மக்கள் திரள் திரளாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். பஸ்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. அக்கூட்டத்தினில் பலர் சிங்கள வாலிபர்கள், சைக்கிளிலும் பலர் சென்றுகொண்டிருந்தனர். நேரம் பிற்பகல் ஐந்தைத் தாண்டிவிட்டது. சுகததாசா ஸ்ரேடியத்தைச்சுற்றி எங்கு பார்த்தாலும் பொலிஸார்தான். சில பொலிஸார் மழைக்கோட்டு அணிந்திருந்தனர். நிலம் ஒரே சேறும் சகதியுமாக இருந்தது.

ஸ்ரேடியத்திற்குச் செல்லும் வழிகளில் மக்கள் மழையையும் பொருட்படுத்தாது திரண்டிருந்தனர். 'எம். ஜி. ஆர். வருகிறார்' என்றுதான் எங்கும் பேச்சாக இருந்தது, சில வாலிபர்கள் சிவப்பு-கறுப்பு நிற சேர்ட் அணிந்திருந்தனர். 5 மணிக்கு எம். ஜி. ஆர். வந்துவிடுவார் என்றுதான் சகலரும் [illegible] ஸ்ரேடியத்தில் [illegible] பெறுவதற்காக நீண்ட வரிசை. உயர்வகுப்பு டிக்கட் எல்லாம் முடிந்துவிட்டது. 5 ரூபா டிக்கட் மட்டுமே கொஞ்சம் இருப்பதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பெரும் ரஸிகர் கூட்டம் திரண்டுவிட்டது; இதே வேளையில் ரோட்டில் சிலர் 5 ரூபா டிக்கட்டை பத்து ரூபாவிற்கும் விற்றுக்கொண்டிருந்தனர். டிக்கட் பெறாதவர்கள் ஏமாற்றத்துடன் எம். ஜி. ஆர். வரும் வழியில் நின்ற மக்களோடு சேர்ந்துகொண்டனர்.

எழுதுவது

'யோகி'

ஸ்ரேடியத்திற்குள் ஒரு பந்தல் போடப்பட்டிருந்தது. அதற்குள் உயர் வகுப்பு டிக்கட் பெற்றவர்கள் மட்டும்தான் செல்ல முடியும். 5 மணிக்கே அப்பகுதி நிரம்பிவிட்டது. சில ஆசனங்கள் மட்டும் வெலுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. 5 ரூபா டிக்கட் ரஸிகர்களுக்கு, ஸ்ரேடியத்திற்குள் சுற்றிவர நின்று பார்க்க வசதி செய்யப்பட்டிருந்தது. நிலத்தில் இருக்கவே முடியாது. ஒரே வெள்ளமாக இருந்தது. சிலர்மட்டுந்தான் குடை வைத்திருந்தனர். மற்றவர்கள் எல்லோரும் அன்று முழுக்குத்தான்.

**நம்பலாம் நடந்தது!**

6 மணியாகியும் எம். ஜி. ஆர் வந்தபாடில்லை; சிலருக்கு அலுத்துவிட்டது.

பந்தலுக்குள் யாராவது எம். ஜி. ஆர். சாயலில் வந்துவிட்டால் 'அதோ எம். ஜி. ஆர்' என்று 5 ரூபா ரஸிகர்கள் கோஷிப்பார்கள். அதன்பின் வேறு ஆள் என்று தெரிந்ததும் கூச்சல் திடீரென நின்றுவிடும். இது வேடிக்கையாக இருந்தது.

சரியாக 7 மணிக்கு ஒரு ஜீப் வண்டி உள்ளே வந்தது. அதற்குள் எம். ஜி. ஆரும், கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியும் இருந்தார்கள். எங்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்; பந்தலுக்குள் இருந்தவர்களை எம். ஜி. ஆர். வணங்கினர். 5 ரூபா ரஸிகர் பக்கம் ஜீப் வண்டியை செலுத்தும்படி எம். ஜி. ஆர். சாரதியிடம் சைகை காட்டினர்.

திடீரெனப் பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது; பக்கத்தில் நின்ற பொலிஸ்காரர் ஒருவர் ஒரு குடையுடன் ஜீப் வண்டியில் ஏறி எம் ஜி ஆரின் தலைக்குமேலே குடை பிடித்தார். மற்றொரு

(11-ம் பக்கம் பார்க்க)

நாளை குதூகல ஆரம்பம்

ரொலரூம்ஸ்

ஸ்தாபனத்தாரின்

நத்தார் புதுவருட

மலிவு விற்பனை

சகல விற்பனைப் பகுதிகளிலும் விலைகள் மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளன

ஆடவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

சகல விதமான சேட்டுகளும் கட்டுப்பாட்டு விலைக்கும் குறைவாகப்பெற்றுக் கொள்ளலாம்

பெண்மணிகளுக்கு புதுவருடத்திற்கென

விசேடமாக வரவழைக்கப்பட்டபல வர்ண

நைலெக்ஸ் சாறிகள்

லங்கா மணிப்புரி சேலைகள்

10% கழிவுடன் தரப்படும்

சிறுவர் சிறுமிகளுக்கு கண்கவர் டிசைன்களில்

0 புஷ்ஷேர்ட்டுகள் 0 ஜிவ்டுகள் 0 சன் சூட்டுகள்

பொன்னான சந்தர்ப்பத்தை நழுவ விடாது

இன்றே விஜயம் செய்யுங்கள்

ரொலரூம்ஸ்

46, மெயின் வீதி, [போன்: 7099] யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் மேடையேறிய 'என்ன உலகமடா!' 'இதுவும் ஒரு நாடகம்!'

நடந்த 4-12-71 மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கொழும்பு-யாழ் கலையரங்கத்தினர் 'என்ன உலகமடா' இதுவும் ஒரு நாடகம் ஆகிய இரண்டு நாடகங்களை அரங்கேற்றினர்.

'என்ன உலகமடா' என்ற நாடகம் முக்கியமான 3 சமூகப் பிரச்னைகளை முன்வைத்து எழுதப்பட்டிருந்தது. சாதிப் பிரச்னை, கள்ளக் கடத்தல், கள்ளத்தோணி வியாபாரம் ஆகிய மூன்று விஷயங்களை ஒரே மேடையில் சில மணி நேரங்களில் காண்பிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. சாதிப்பிரச்னையைப் பொறுத்த வரையில் உயர்சாதிப் பிரமுகர் ஒருவரின் மகளை அவரது படித்த மகன் தனது நண்பனும் எஞ்சினியருமான தாழ்ந்த சாதிக் காரனுக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி செய்வதாகவும் அதற்கு அப் பெண்ணும் பூரண சம்மதமளித்து "சமூகத்தை திருத்தும் பணியில் பெண்களுக்கும் பங்குண்டு" என்று சொல்வதாகவும் நாடகக் கதை சித்தரிக்கப்பட்டுள்ளது. இதே பிரமுகர்தான் கடவுள் பக்தி மிக்கவராகவும், கள்ளக் கடத்தல் பேர்வழியாகவும், கள்ளத்தோணிகளைக் கடத்திப் பணம் சம்பாதிப்பவராகவும் காண்பிக்கப்படுகிறார். வெளிவேஷம் போடும் பல சமயவாதிகளையும், பிரமுகர்களையும் கண்மூடித்தனமாக நம்பக்கூடாது என்று கூறி அவர்களது முகமூடியைக் கிழித்தெறியும் வகையில் இந் நாடகக்கதை எழுதப்பட்டிருந்தாலும் சாதிப்பிரச்னையைப் பொறுத்த வரையில் சரியான வர்க்கக் கண்ணோட்டத்துடன் இப் பிரச்னை அணுகப்படவில்லை என்பேன். "எல்லோரும் படித்து வாருங்கள். அப்போது ஏற்றுக் கொள்கிறோம். சமமாக நடத்துகிறோம்." என்பது போன்ற கருத்துகள் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டன. ஆழ நோக்கினால் இன்றைய சமூகப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இது சரியான வழியா? என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். மிகவும் அனுபவமுள்ள நடிகர்களையும் ஆற்றலுள்ளவர்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட இந் நாடகம் இன்னும் 'சீரியஸாக' சரியான கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டிருந்தால் உண்மையில் 'வடுமீவம்' போன்ற தரமான நாடகங்களுடன் ஒப்பிடக் கூடியதாக இருந்திருக்கும். ஆனாலும் மிகக் குறுகிய நேரத்தில் மூன்று முக்கியமான பிரச்னைகளைத் தொட்டு அவை பற்றிய சிந்தனையைத் தூண்டிய நாடக ஆசிரியரையும், தயாரிப்பாளர்களையும் அவர்களது முயற்சிக்காகப் பாராட்டுகிறேன். நடிப்பைப் பொறுத்த வரையில் எவரையும் குறை சொல்வதற்கில்லை. காட்சியமைப்பு மிகவும் கச்சிதமாக அமைந்திருந்தது. குறிப்பாக ஒரு மழைக்காட்சி மிகவும் தத்ரூபமாக மேடையில் காண்பிக்கப்பட்டது. நாடகத்தைப் பொறுத்த வரையில் இப்படியான காட்சிகள் அவசியமில்லை என்று விமர்சகர்கள் கருதினாலும் காட்சியமைப்பு என்ற பகுதியில் மிகவும் சிறப்பு எனலாம். இந் நாடகத்தில் பங்கு கொண்ட பெண்

## கொழும்பு-யாழ் கலையரங்கத்தின் சிறந்த முயற்சி

நடிகர்கள் தமது பாத்திர இயல்பை உணர்ந்து சிறப்பாகச் செய்ததை இங்கு குறிப்பிட வேண்டும். ஏனென்றால் அநேகமான கொழும்பு நாடகங்களில் பெண்களின் பாத்திரங்கள் இயல்பாக அமைவதில்லை.

அடுத்து 'இதுவும் ஒரு நாடகம்' ஓர் நகைச்சுவை நாடகமாக அமைந்தது. நல்ல பிள்ளைக்கு வேஷம் போட்டுப் பலரையும் ஏமாற்றும் ஒரு இளைஞனின் முகமூடியைக் கிழிக்கும் கதை இது. பொதுவாக இப்படியான சம்பவங்கள் எமது வாழ்க்கையில் நடைபெறுவது வழக்கம். இந்த வகையில் மிகவும் நன்றாக எழுதப்பட்டுள்ள இந்த நாடகத்தில் நகைச்சுவையும் நிறைய இருந்தது. இரண்டு நாடகங்களிலும் ஓரே நடிகர்கள் தான் பங்கு கொண்டிருந்தார்கள். எல்லோரும் வானொலி மேடை நடிகர்கள். இதனால் இவர்களது அனுபவமும் நல்ல நடிப்புக்கு முக்கிய காரணம் எனலாம். கொமடி நடிகர்கள் சந்திர மோகன் சண்முகம், சாந்தி சண்முகம். ஆகிய இருவரதும் நடிப்பாற்றலை எதிர்காலம் பயன் படுத்த வேண்டும். சிறந்த கதைகளைக் கொடுத்தால் கொழும்பு யாழ் கலையரங்கத்தினர் மிகவும் தரமான நாடகங்களை ரசிகர்களுக்குக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கைக்கு அடித்தளமாக இந்த இரண்டு நாடகங்களும் இருக்கின்றன எனலாம். தமது வழக்கமான பாணிகளை விடுத்து இத்தகைய ஓரளவு மாத்திரமான நாடகங்களை அரங்கேற்ற முன் வந்த கொழும்பு யாழ். கலையரங்கத்தின் முயற்சி ஈழத்து நாடக உலகிற்குப் பசுமையான சின்னமாகும்.

— க. சேரன்

## 'சோ'வின் துணிச்சல்!

ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சிக்கும் நான் எதிர் என்று கூறிக்கொள்ளும் நடிகர் சோ ஒரு துணிச்சல் காரர் தான். எம். ஜி. ராமச்சந்திரன் இரட்டை வேடங்களில் நடித்துள்ள நீரும் நெருப்பும் படத்தில் அவரும் நடித்துள்ளார்.

இப் படத்தில் சோ நடித்த பல காட்சிகளையும் வெட்டி விட்டு ஒரே ஒரு காட்சியை மாத்திரந்தான் வைத்திருக்கிறார்களாம்.

சோ "ஒரேஒரு காட்சியில் தோன்றினால் என்ன? எனக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்தால் இது மாதிரி எத்தனை படங்களில் வேண்டுமானாலும் நான் நடிக்கத்தயார்" என்கிறார்.

"தன்னிலும் பார்க்க மற்றவர்கள் திறமையாக நடித்தால் அந்தக் காட்சிகளை வெட்டி எறியும்படி கூறும் நடிகரல்ல சிவாஜி" என்று முன்பு ஒரு தடவை ஜெயலலிதா கூறியதை இப்போது நினைத்துப் பார்க்க வைக்கிறதல்லவா இச் சம்பவம்.

என்றாலும் சோ துணிச்சல் காரர்தான்.




# இசைத்தமிழுக்கு இளம் இரத்தம்!

# செவிகளில் தேன்மழை!!

'யா'ராவது இரண்டு பொடிப்பசங்க வந்து ஜலராவைத் திருடிவிட்டுப் போவார்கள்!' என்றுதான் இளங்கலைஞர் மன்ற ஆண்டு ராரிப்பண விழாவைப் பற்றிக் கடந்தமாதம் 27-ந் திகதிவரை நான் அபிப்பிராயம் கொண்டிருந்தேன். இருபத்தேழாந்திகதி வந்தாலும் வந்தது. திவ்ய ஜீவன மண்டபத்திற்குப் போனாலும் போனேன் — என்ன ஆனேன் என்று கேட்கிறீர்களா?

பிய்த்து வாங்கிவிட்டார்கள் ஐயா! மத்தளத்தையா என்று கேட்காதீர்கள்! என் செவிகளைத்தான். விழா முடிந்து வெளியே வந்த போது என் செவிகளை மறக்காமல் தொட்டுப் பார்த்துக் கொண்டேன் — நன்றிருந்தது!

பனியினால் அல்ல! இசைத் தேன் மழையினால்...! அத்துடன் புதிய 'ஜலதோஷம்' வேறு பிடித்துக்கொண்டது என்ன! இதுவரை இசைக்கச்சேரிப் பக்கமே அதிகம் தலைவைத்துப் படுக்காத நான் இந்த இளங்கலைஞர்களின் எழுச்சி [illegible] எனக்குள்ளேயே [illegible] மெட்டுகளைச் '[illegible]' தொடங்கிவிட்டேனென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

### புரட்சி மணியின்

### "உன் தந்தை யார்?"

எதிர்வரும் 18-12-71 மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வி. ஆர். புரட்சிமணி தயாரித்து அளிக்கும் "உன் தந்தை யார்?" என்ற நாடகம் நடைபெறவுள்ளது. செல்விகள்:- ஐ. சாந்தி, ஜெமிலா, கே. கல்விரா, எம். நிர்மலா, எஸ். செல்வமலர், ஐ. இருதயராணி, ஏ. மலர்விழி, எம். கலாவதி, ஐ. வசந்தி ஆகியோரும் மணியாபு, எஸ். நடராஜன், உசேன், பி. ராஜா ஆகிய ஆண் நடிகர்களும் இந் நாடகத்தில் பங்கு கொள்கிறார்கள்.

கதை, வசனம், பாடல், டைரக்ஷன் அனைத்தையும் வி. ஆர். புரட்சி மணியே கவனித்துள்ளார்.

(வெக். திருபர்)

### இளமை

இசைக்கலை வளரவேண்டியது! மொழி விளங்காதவர்கள் கூட இசையின் [illegible] மிக அனுபவிக்கிறார்கள். இசைக்கலை பயிலும் ஆசை எவ்வளவோ பேருக்கு இருக்கிறது — ஆனால் அத்தனை பேருக்கும் வசதி கிடைப்பதில்லை. வகுப்பறையில் கடைசி வாங்கிலிருந்து மேசையில் தாளமிடும் சுட்டிப்பையனிடம் கூட இசையின் உக்கிரமான ஆட்சியினை நாம் காணவில்லையா?

தனித்த இளங்கலைஞர் ஒருவர் தனது முதற்கச்சேரியை அரங்கேற்றுவதில் பொருளாதாரீதியிலும் பிறவகையிலும் எவ்வளவோ சிரமங்காணுகிறார். இவர்களுடைய கச்சேரிகளுக்கு ஒழுங்கு செய்த [illegible] வகையில் ஒரு மன்றம் இருந்தால் இல்லாமை [illegible] இருக்கும் எத்தனையோ இளங்கலைஞர்கள் முன்னுக்கு வரலாம் - இந்த எண்ணம் [illegible] ஆதரவு கிடைக்குமா என்றும் ஐயமேற்பட்டது.

'ஆதரவு கிடைத்தேதீருக்கிறது!' என்று என்னிடம் பூரிப்புடன் சொன்னார் திரு. பொன் சுந்தரலிங்கம்: கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தர்ம சிந்தனையாளர் பலருடைய ஆதரவுடன் மலர்ந்திருக்கிறது அகில இலங்கை இளங்கலைஞர்கள் மன்றம்!

### பெண்கள்

பண்பட்ட கலைஞர்களின் இசைக்குச் சற்றும் சோடை போகாதவாறு மூன்று மணி நேரம் 'தேன்மழை' பொழிந்தார்கள் இந்த இளைஞர்கள்! இசைக்கலையினில் இளம் பெண்களும் மேற்கொண்டிருக்கும் ஆர்வத்தைக்காண நெஞ்சம் குளிர்கிறது! பரவி வரும் மேலைநாட்டிசைக் [illegible] பண்பட்ட அடக்கத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் விழாவினை நடாத்திய இந்த இளங்கலைஞர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்!

புதிதாக மலரும் இளங்கலைஞர்களின் கச்சேரியை மாதமொருமுறை நடாத்தி 'மெடல்' கொடுத்துக் கௌரவிக்கவேண்டுமென்று இம்மன்ற உறுப்பினரொருவர் பிரபல நாதஸ்வரக் கலைஞர் ஒருவரிடம் கூறியபோது அவர் உளம்மலர்ந்து, இளங்கலைஞர்களுக்கு இப்படி ஆசி[illegible] 'மெடல்' மட்டுமல்ல, என் நாதஸ்வரத்தையுமே இவர்களுக்குக் கொடுத்துவிடலாமே!' என்றாராம்.

உண்மைதான், சரியாகத் தட்டி உற்சாகப்படுத்தப்படும் இந்த இளங்கலைஞர்களின் இசைத்தமிழ் வெள்ளம் ஈழத்தின் ஒவ்வொரு மூலைக்கும் வரவும் நாள் தொலைவில் இல்லை என்றே கூறலாம்.

—'வேணு'

## 'நட்சத்திர இரவு'

யாழ்ப்பாணத்தில் சென்றவாரம் 'திரை' நடாத்திய 'நட்சத்திர இர'வில் நடந்த நிகழ்ச்சிகளை அடுத்த வாரத்தில் அலசு அலசு என்று அலசுகிறார் 'மத்தி' 'கலைச்செல்வ'னின் 'எதற்கும் ஓர் எல்லை' தமிழ்நாட்டு படவுலகத்துக்கு ஒரு சவால் என்கிறது கட்டுரை. படியுங்கள்.


## விதை மிளகாய்

இனம்: மகா இலுப்பள்ளம சுத்த இனம்
சுத்தம்: 95% முளைத்திறன்: 80%

கிடைக்குமிடம்:-

(1) விதை கமம் (SEED FARM)
116 1/4 கல்லை, கண்டி வீதி, பரந்தன்.

(2) றோஸ் பிறண்ட் தொழிற்சாலை
(ROSE BRAND FACTORY)
உடுவில் றோட், மானிப்பாய்.


விலை 1 றுத்தல் ரூபா 5|50 சதம்

விவசாய இலாக்காவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விதை தயாரிக்கும் கமம். விவசாய இலாக்காவினரும் எங்களிடம் விதைமிளகாய் வாங்குகிறார்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சென்ற் பற்றிக்ஸ் கல்லூரி

# கிறீஸ்தவர்களுக்கென தனித்தியங்குகிறது



கல்லூரி ஸ்தாபகர் பிதாலோங்

கல்வி ஸ்தாபனங்களில் பழம் பெரும்புகழ் படைத்து அழியாச் சாதனையுடன் விளங்கும் கல்லூரிகளில் முன்னணியில், புகழின் உச்சாணியில் விளங்குகிறது புனித பத்திரிசியார் கல்லூரி. கத்தோலிக்க கல்வி ஸ்தாபனமாக இருந்தும் சகல சாதி, சமய, நிறபேதம் பாராட்டாது சகல மாணவர்களும் பயிற்சிபெற வாய்ப்பளித்தது; அன்றும், இன்றும் என்றும் எல்லோர் உள்ளத்திலும் இனிய நினைவான நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது. இக்கல்லூரி என்றே கூறலாம்.

### தனித்தியங்குகிறது

121 வருடங்களாகக் கல்விச் சேவை புரியும் இக்கல்லூரியானது அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கியபோது தனியுடன் தனியார் பாடசாலையாகத் தனித்தியங்கித் தனது கல்விச்சேவையைத் திறம்பட நடத்தி வருகின்றது. இதன் பெருமை கூறுந்தரமன்று.

### எங்கள் பாடசாலை - 5

புனித பத்திரிசியார் கல்லூரியானது இந்நூற்றாண்டின் காலத்திலே புகழ் மணக்கும் காரணம் இருபெரும் தலைவர்களின் தலைமைப் பீடமாகும். இவர்கள் தான் வண. பிதா சாள்ஸ் எஸ். மத்தியூஸ் அடிகளாரும், வண. பிதா ரி. எம். எவ். லோங் அடிகளாரும் இவர்களுடைய ஞாபகார்த்தமாக 'மத்தியூஸ்கட்டடமும்' 'லோங் தொழிலகம்'மும் விளங்குகின்றன.

### ஆரம்பம்

யாழ். மேற்றிராசனத்தின் பொறுப்பை வந். பெத்தாச்சினி ஆண்டகை அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்குமாகத் தனித்தனி ஆங்கிலப் பாடசாலைகளைத் தோற்றுவிக்க எண்ணினார். அவருடைய [illegible] 1849-ல் ந[illegible] ஆண்டிலே தான் மிகவும் சிறிய அமைப்பில், உடுவில் "கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை" என்ற பெயரில் ஆரம்பமாகியது. அப்போது இதன் அதிபராக விளங்கியவர் ஐரிஷ் தேசத்து இல்லறவாசியான பற்றிக்லோக் என்பவராகும். இது முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட போது. தற்போதைய கல்லூரியின் நிர்வாகப்பிரிவிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் முகாமையாளராக விளங்கும், பாக்கியம் வண. பிதா எல். பி. எச் மலேறூர் அடிகளாருக்குக் கிட்டியது. இத்தரக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முன்னேற்றத்தையும் முக்கியத்துவத்தையும் கருதி, இக்கிளையிலிருந்து மேற்றிராணியாரின் விருப்பத்துக்கமையத் தனியாக்கப்பட்ட வண. சகோதரர் யோண் யோசேப் பிறவுண் 1896 முதல் 1862 வரை அதிபராகி வண. சகோ வரையுடன் சேர்ந்து கடினமாக உழைத்து தரமான கல்விக்கூடமாக மாற்றினார். 1862இல் வண. சகோதரர் பி. ஜே. கொன்வே என்பவரின் தலைமையின் கீழ் நிர்வாகம் மாறியது. இவரின் புதிய தலைமை பல புதிய மாற்றங்களைக் கொண்டுவந்தது. இதனுள் உள்ளூர் பகிரங்கப் பரீட்சைகளில் மாணவர்கள் பங்குபற்றினார்கள். இப்பரீட்சைகளில் மாணவர்கள் முதற்தரமாக சித்தியடைந்தமை பாடசாலையின் பெயரைப் பிரசித்தியடையச் செய்தது.

### புதுப் பெயருடன் கல்லூரியாக விளங்கியது

1880ல் இப்பாடசாலையைக் கல்லூரியின் அந்தஸ்[illegible] தெளிவுக் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்துக்குத் துணை நின்று உதவியவர் அக்கால வண்டாரக் கல்விப் பதிகாரியாக விளங்கிய திரு. வில்லியம் பிளேயர் ஆவர். புதிய பெயர் கொண்ட இக்கல்லூரி 1881-ல் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது. இவ்வேலை தலைமைப் பொறுப்பை வண. பொஞ்சீன் ஆண்டகை நடத்தினார். இவ்வேலை இதன் முதல் அதிபராக வண. பிதா ஜே. ஆர். சிமித் அடிகள் தொண்டாற்றினார். 1883-ல் வண. பிதா வித்தன் அதிபரானார் இவரைத் தொடர்ந்து 1885-ல் வண. பிதா பூலை கொலினும் 1886-ல் வண. பிதா டபி தெலிஞம் அதிபரானார்கள். 1888-ல் இக்கல்லூரி மாணவர்கள் முதன் முறையாக அக்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய "கேம்பிரிஜ் சீனியர்" பரீட்சைக்குத் தோற்றினார்கள் இக்காலத்திலிருந்து கல்லூரியின் புகழ் குன்றின் மேலிட்ட தீபமா

**அ. தேவராசா**

கச் சுடர் வீசத் தொடங்கி இது.

1885-ல் உதவி ஆசிரியராக வந்து சேர்ந்த வண. பிதா மத்தியூஸ் 1889-ல் அதிபரானார். இவர் 1901-ல் இளைப்பாறும்வரை கல்லூரியின்காலம் பொற்காலமாகத் திகழ்ந்தது.

### பிதா மத்தியூஸ் சகாப்தம்

இதன்பின்னர் வண பிதா சாள்ஸ் எஸ். மத்தியூஸ் கல்லூரியின் அதிபர் பதவியை 1903-ல் கைபெற்றார். இவர் தமது முழுசக்தியையும் கல்லூரியின்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் செலவிட்டார். நீண்டகாலம் அதிபராக இருந்த இவர் 1911-இதனது கல்லூரியின் ஆசிரியர்களுக்கு ஒய்வுகால சம்பளத்திட்டத்தை ஆரம்பித்தார். இவருடன் தோளோடு தோள் கொடுத்து உதவிய இருவர்களான வண சகோதரர் பிரிஜென்றும் வண பிதா சோனாலும் ஆவார்கள்.

1913-ல் வண பிதா போல் ஏ. லேமார் அடிகள் ஓர் ஆசிரியராக வந்தார். இவர் பின்னர் 1921 - 1924வரை அதிபராகவும் கட்டளைாதிபதியின் பதம் ஆயராகவும் நியமனம் பெற்றார். 1920ம் ஆண்டிலேயே வண பிதா மத்தியூஸினால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுள் அயர்லாந்து தேசத்தவருமான பிதா ரி.

(11-ம் பக்கம் பார்க்க)

### உங்களுக்குத் தெரியுமா?

**வினாக்கள்**

1 ஐக்கிய நாடுகள் பொதுச் சபை எங்குள்ளது?
2 ரஷ்யாவின் தலைப் பட்டினம் யாது?
3 அமெரிக்காவின் ஜனாதிபதி யார்?
4 சமீபத்தில் ஐ. நா. வில் இடம்பெற்ற நாடு எது?
5 மெக்கா நகரம் எந்த நாட்டில் உள்ளது?
6 சமீபத்தில் எந்த நாட்டில் பிரிவினைக் கலகம் ஏற்பட்டது?
7 முஜிபுர் ரஹ்மான் என்பவர் யார்?
8 சமீபத்தில் நோபல் பரிசு பெற்ற தலைவர் யார்?

**விடைகள்:**

1 அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரத்தில்
2 மாஸ்கோ
3 நிக்ஸன்
4 சீனு
5 சவூதி அரேபியாவில்
6 பாகிஸ்தானில்
7 கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தலைவர்
8 மேற்கு ஜெர்மன் பிரதமர் வில்லிபிராண்ட்

அனுப்பியவர்:
க. முத்துராஜா,
அராலி

# நல்லவன் வாழ்வான்

நாதன் ஏழைச் சிறுவன். அவன் பெற்றோர் வறியவர். அவனுக்கு எட்டு வயதாய் இருந்தபோதே தாய் தந்தையர் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர்:

தாய் தந்தை இறந்ததும் அவன் வாழ்க்கை துன்பமாகவே இருந்தது. ஆனால் படிப்பிலே கண்ணுங்கருத்துமாய் இருந்தான்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தது அவன் மனத்தில் பதிந்திருந்தது. கல்விமைத் தொடர அவன் வீடுவீடாய்ச் சென்று பிச்சை கேட்டான். அவனை எல்லோரும் பார்த்து இரங்கிப் பிச்சை இட்டனர். பிச்சை எடுத்ததெல்லாம் படிப்பிலே செலவிட்டான்

கஷ்டப்பட்ட நாதன் எல்லா வகுப்பிலும் முதல் மாணவனாகவே தேறினான். பலர் முன்வந்து புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தனர். நாதன் ஒரு நாள் பாடசாலை சென்றுகொண்டிருக்கும் போது பணமுடிச்சொன்றை வழியில் கண்டெடுத்தான். இதைக்கொண்டு நாதன் வறுமையைப் போக்கலாம். ஆனால் அவன் இதை விரும்பவில்லை. 'தொலைத்தவர் அவதிப்படுவர்... நான் இதை அவரிடம் சேர்க்கவேண்டும். இவ்வூர் கிராமசேவையாளரிடம் கொடுப்பதே நல்லது, அவர் தொலைத்தவரிடம் கொடுப்பார்'- இவ்வாறு நல்ல குணமுள்ள நாதன் எண்ணினான்.

உடனே கிராமசேவகர் வீடு சென்று தான் எடுத்த பணமுடிச்சைக் கொடுத்து விட்டுத் திரும்பினான். கிராமத்து மக்கள் நாதனைப் பாராட்டினர்'

வறுமையின் மத்தியில் நாதன் ஜி. சி. ஈ பரீட்சையில் சித்தியடைந்தான். வேலை தேடினான், கிடைக்கவில்லை.

'இந்தநல்லவனுக்கு வேலை கிடைக்கவில்லையே'-அவ்வூர் மக்கள் இரங்கினர்! இவ்வேளையில் அவ்வூர் கிராம சேவகர் ஓய்வு பெற்றார். கிராம மக்கள் நாதனுக்கு கிராமசேவகர் வேலையை வாங்கிக் கொடுத்தனர் தனக்கு நன்மை செய்த அந்த கிராமத்து மக்களை நாதன் நன்கு கவனித்தான்.

—கோ: கபிலன்.
6-ம் வகுப்பு.




### யார் கண்டு பிடித்தார்?

★ 1864-ம் ஆண்டு பவுண்டன் பேனாவை வாட்டர்மென் அமெரிக்காவில் கண்டு பிடித்தார்.

★ 1876-ம் ஆண்டு கிராமபோன் பெட்டியை ஆல்வா எடிசன் அமெரிக்காவில் கண்டு பிடித்தார்.

★ 1884-ம் ஆண்டு மோட்டார் வண்டியை ஹென்றி போர்டு அமெரிக்காவில் கண்டு பிடித்தார்.

★ புகையிரத வண்டியை ஸ்டீவின்சன் இங்கிலாந்தில் 1825-ம் ஆண்டு கண்டு பிடித்தார்.

★ 1860-ம் ஆண்டு தையல் மெசினை திமானியர் பிரான்சில் கண்டு பிடித்தார்.

★ மின்சாரத்தினை பெஞ்ஜமின் பிராங்ளின் அமெரிக்காவில் கண்டு பிடித்தார்.

★ 1550-ம் ஆண்டு கடிகாரத்தினை பீட்டர் ஹெல் ஜேர்மனியில் கண்டு பிடித்தார்.

தொகுத்தவர்
ஜெயராணி லிலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிமொழி

ஒருவரை ஒருவர் காத்துவருவதாலேதான் சமூகங்கள் நிலைத்து நிற்கின்றன. ஒருதேசத்து மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து ஒருவருக்கொருவர் உதவியும் வந்து, சமூகவாழ்க்கையைக் காப்பாற்றி வருவதைப்போல் பிரபஞ்சம் முழுவதற்கும் அந்த அன்பு முறையை விஸ்தரித்துப் பெருக்கவேண்டும். குடும்பப் பிணைப்பைத் தேசத்துக்கும் சமூகத்துக்கும் விஸ்தரித்திருக்கிறோம், சமூகப்பிணைப்பை உலகளவு விஸ்தரிக்க வேண்டும். உலகம் முழுவதும் ஒரேகுடும்பம் ஆகவேண்டும். பரஸ்பர அன்பினால்தான் உலகம் நடைபெற்று வருகிறது.

— மகாத்மாகாந்தி

## முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் மனேஜராக கடமையாற்றிய 'மாமா' என அழைக்கப்படும் திரு. K. M. பரமசிவம் அவர்கள் எமது ஸ்தாபனத்தில் இருந்து விலகிக்கொண்டார்கள் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்
ஆர். வி. ஜி. பீடி உற்பத்தியாளர்
47, பீச் றேட், யாழ்ப்பாணம்.

போன்: 230
தந்தி: ஆர்விஜி.

### கங்கைக்கரையில் ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண மனிதர்களுக்குள்ள குறைபாடுகள் அனைத்தும் புராணக் கடவுளிடம் இருந்தன. ஆனால் அவைகளுக்குத் தெய்வீக விளக்கமும் பத்திக்காரணங்களும் உண்டு. அசுரர்களுடன் போரிட்டு வென்றபிறகு கார்த்திகேயக் கடவுள் (முருகன்) பின்னதன் பாணத்தால் தாக்கப்பட்டார் ஆகவே. வள்ளி என்ற குறிஞ்சிநில மங்கைமீது மோகம் கொண்டு அவளை நாடிச் சென்றார். கதிர்காமத்தில் தான் அவளை அவர் சந்தித்து மணம் புரிந்தார், அன்றிலிருந்து இன்று வரை அங்கு சுப்ரமண்யசுவாமி வசிப்பதாகக் கூறப்படுகிறது. கதிர்காமம் என்பது கார்த்திகேய கிராமம் என்பதன் திரிபு.

### ஆசியாவில் ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

திரா பக்கமும், சீனம் பாகிஸ்தான் பக்கமும் சாய்ந்துள்ளன. இந்தச் சண்டை ரஷ்யா-சீன யுத்தமாக வளருமா? அப்படி வளருமானால், ஆசியாவின் நாசத்துக்கு அதைவிட பெரிய ஆபத்து வேறு எதுவும் இருக்க முடியாது. ஆசியாவின் சுதந்திரத்துக்கும் வாழ்வுக்கும் இது ஒரு பெரிய சோதனை. ரஷ்யாவுக்கும் சீனத்துக்கும் தனிப்பட்ட வேற்றுமைகள் என்ன இருப்பினும், ஆசிய மக்களின் மேலான நன்மையை முன்னிட்டு, அவை இரண்டும் ஒத்துழைக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது.

# 'நாட்டுப்பற்றுள்ளவர்களை நீங்கள் உருவாக்கவேண்டும்'

## ஆசிரியர்சங்க மகாநாட்டில் யாழ். மேயர் உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு 'கடந்த காலத்தில் இங்குள்ள சிலரும் தென்பகுதியிலுள்ள சிலரும் தென்பகுதி மக்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தைப்பற்றி தப்பபிப்பிராயத்தைத் தவறான கருத்தைப் பரப்பி விட்டார்கள். இன்னும் யாழ்ப்பாணத்தவரை அந்நிய மக்கள் எனத் தென்பகுதி மக்கள் அதிகமானோர் கருதி வந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள நீங்கள் இப்பகுதியை சுற்றிப்பார்த்து இப்பகுதி மக்களுடன் பழகி யாழ்ப்பாண மக்கள் பற்றி நன்கு அறிந்த பின்னர் தென்பகுதிக்குச் சென்று அங்குள்ள தப்பபிப்பிராயத்தைப் போக்கவேண்டும். உங்கள் நண்பர்களுடன் அடிக்கடி இப்பகுதிக்கு வந்தால்தான் உண்மையான ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியும்''

யாழ். நகர மண்டபத்தில் நேற்று நடந்த ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கமய ஒட்டாத்த மகாநாட்டில் யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பீட்டர் கெய்ஸ் தலைமையில் நடந்த இக்கூட்டத்திற்கு சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்பகுதி ஆசிரியர்கள் சமூகளித்திருந்தனர். நகரமண்டபத்திலும் மேல்மாடியிலும் ஆசிரியர்கள் நிரம்பியிருந்தனர்.

மங்கள இசையுடன் ஆரம்பமான இந்த மகாநாட்டில் சமசமாஜ கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. வில்லநாதனும் சுதந்திர கட்சியை சேர்ந்த திரு. பி. கதிரேசலுவும் கலந்துகொண்டனர். நகரமண்டபம் தேசியக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திரு. அல்பிரட் துரையப்பா மேலும் கூறியதாவது: அகில இலங்கை மகாநாடொன்று முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறுகின்றது. ஆசிரியர்களாகிய நீங்கள் இதற்கு வழிகாட்டி விட்டீர்கள். இதைத்தொடர்ந்து அகில இலங்கைக் கிராமசபைத் தலைவர்கள் மகாநாடும் அடுத்தமாதம் இங்கு நடைபெறவிருக்கிறது. இதைத்தொடர்ந்து இன்னும்பல அகில இலங்கை மகாநாடுகள் இங்கு நடைபெறுமென எதிர்பார்க்கிறேன்.

ஜாதிக குருசங்கமய வடபிரதேச இணைத்தலைவர் திரு. வி. கிருஷ்ணபிள்ளை பேசும்போது சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டை முன்னேற்றுவது ஆசிரியருடைய பொறுப்பாகும் என்று கூறினார். சங்க பொதுச்செயலாளர் திரு எல். ஆரியவன்சா, வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தார்.

### நாளை வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மலேஷியா சிங்கப்பூர் சுற்றுப்பிரயாண சொற்பொழிவுகள் பற்றிய நூல்வெளியீட்டுவிழா தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நாளை நடைபெறவிருக்கின்றது.

### இனித்தப்ப..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக இன்று இந்த வேண்டுகோளைவிடுத்தார், இந்திய படைகளின் பிரதம தளபதி ஜெனரல் மானெக்ஷா.

மேற்கிலிருந்து உங்களை மீட்க படை வரும் என்று நீங்கள் எண்ணினால் அது மடைத்தனம்! மீண்டும் மீண்டும் கூறுகிறேன். சரணடையும் உங்களுக்கு ஜெனிவா ஒப்பந்தத்தின் கீழ் பாதுகாப்பு அளித்து நியாயமான முறையில் வைத்திருப்போம். இன்றேல், மேற்குப் பாகிஸ்தானிலுள்ள ஆண், பெண் பிரஜைகளும் ஆபத்துக்குள்ளாவார்கள், ஏற்படப்போகும் விளைவுகளுக்கு இனி நாம் பொறுப்பாளிகளல்ல. அழியப்போகும் உங்களுக்கு எனது கடைசி எச்சரிக்கை இது. சரணடைந்து, உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்' என்று அவ்வேண்டுகோளில் மானெக்ஷா தெரிவித்தார்.

## டாக்கா பகுதிகளில் அமைதி நிலவுகிறது

### பாகிஸ்தான் அறிவிப்பு

ராவல்பிண்டி, டிச. 11 கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள ஜெசூர் நகர் தம் வசமே இப்பொழுதும் இருப்பதாகவும் தலைநகரான டாக்காவைச் சுற்றியுள்ள பகுதிகளில் எவ்வித போர் நிலைமை இல்லை என்றும், அங்கு பூரண அமைதி நிலவுவதாகவும் ராவல்பிண்டியிலுள்ள பாகிஸ்தான் அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கராச்சிக்கு அருகே, இந்திய கடற்படைக் கப்பல் ஒன்று சேதமாக்கப்பட்டதாகவும், அதிலிருந்து பறந்த விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. இதுவரை இந்தியாவின் 65 டாங்கிகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது. அதிகாரி ஒருவர் ஒத்துக்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

மேற்காஸ்மீரில் காம், மண்டியாலப் பகுதிகளை பாகிஸ்தான் படைகளிடமே இருப்பதாகவும், அங்கு இழந்த பகுதிகளை மீட்க இந்திய இராணுவம் முயன்ற பொழுது அவர்கள் முறியடிக்கப்பட்டதுடன் பலத்த சேதத்துக்குமுள்ளாகினர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 3 நகர்கள் பாக் கைப்பற்றியது

மேற்கு அரங்கில் காஷ்மீர் பகுதியிலுள்ள 3 கிராமங்களைப் பாகிஸ்தான் படையினர் கைப்பற்றியுள்ளனர். அக்பாபூர், ஷேக்பூர் ஆகிய நகரங்களே அவைகளுள் இரண்டாகும், கிழக்குப் பாகிஸ்தானி (பங்களாதேஷ்) லுள்ள குஷ்தியா, ஜமால்பூர் ஆகிய இடங்களில் இன்னமும் போர் நடந்து வருவதை புதுடில்லியிலுள்ள இந்திய அரசாங்க

### சென்ற் பற்றிக்ஸ்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். எப். லோங் அடிகளார் கல்லூரியின் முன்னேற்றத்துக்கு அரும்பணியாற்றினர்.

**பிதா லோங்**

சாதாரண ஆசிரியராக அடியெடுத்துவைத்த பிதா லோங் 3 வருடம் கல்வி கற்பித்தபின்னர் கேம்பிரிட்ஜ் சென்று அங்கு மூன்று வருடங்கள் கற்று மீண்டும் 1926-ல் யாழ்நகர் வந்தார். முதலில் ஆசிரியராகி 1936ல் மத்தியூஸ் அடிகளார் இளைப்பாறியபின்னர் கல்லூரியின் ஒளிரும் அதிபரானார். இவர் 1937-ல் அதிபராகிய பின்னர் கல்லூரியின் காலம் மறுமலர்ச்சி யுகத்தின் தொடக்கம் என்றே கூறவேண்டும். எத்தனையோ புதிய மாற்றங்களையும், திட்டங்களையும் வகுத்து கல்லூரியின் தரத்தை எல்லோரும் மெச்சும் வண்ணம் உயர்த்தினர். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகப் பல வழிகளில் உழைத்தார். உடற்பயிற்சியொடுத்து ஊக்குவித்தார். பல மாணவர் சங்கங்களை அமைத்து உறுதிப்படுத்தினர். கட்டுப்பாடுகளுக்கு மதிப்புக்கொடுக்கப் பயிற்றுவித்தார். இவர் காலத்தில் படிப்பிலமட்டுமல்ல விளையாட்டிலும் மாணவர்கள் சிறந்து விளங்கினர்கள். (வளரும்)

### 48 மணி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் நாங்கள் ஏற்கவேண்டியேற்படுகின்றோம். முக்கிய ஆயுதங்களை அழிப்பதற்கு தயாராகிருக்கின்றோம்....

''கடந்த இரவு இந்திய மிக் '21' விமானங்கள், விமான ஓடுபாதையை திரும்பவும் சேதமாக்கி விட்டன, இல்லாவிட்டால் நாம் இன்று செலவட்டிருப்போம்...மேலும் விமானத்தாக்குதலை நாம் நடத்தலாம் என நம்பவில்லை... கிழக்குப்பகுதி தலைமையகம் போர் நிலைமைபற்றி உங்களுக்கு எவ்வாறு தெரிவித்ததென்று எனக்குதெரியாது. ஆனாலும் இச்செய்தியை உங்களுக்கு தருகிறேன்...

வாஷிங்டன், டிச. 11 ஐக்கிய நாடுகள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியாவை அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் கேட்டிருப்பதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈழநாடு

விரோதிகிருது வருடம் கார்த்திகை மாதம் 26 ம் திகதி (12—12—71)

## யுத்தமும் நாமும்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்று வரும் பயங்கர யுத்தச் செய்திகளை நம்மில் பலரும் ஆவலுடனும் கவலையுடனும் படிக்கிறோம், கேட்கிறோம்.

இலங்கை அரசாங்கம் ஒரு பக்கமும் சேராமல் கண்டிப்பான நடுநிலைமை வகிக்கும் என்று பிரதமர் ஸ்ரீமா தெரிவித்துள்ளார்.

யுத்தம் போகிற போக்கைப் பார்த்தால் இது மூன்றாவது உலக யுத்தமாகவும் மாறுமோ என்றும் அஞ்சக் கூடியதாகவுள்ளது.

அப்படி ஆகுமாயின், மிக அண்மையிலுள்ள இலங்கைக்கு ஏற்படக் கூடிய பலாபலன்கள் என்ன?

தற்காலிகமாக சில அற்ப நன்மைகள் ஏற்படுவது போல் தோன்றலாம். ஆனால் சண்டை வளர வளர நமக்குப் பெரும் தீங்கு ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

கண்டிப்பான நடுநிலைமை வகித்தாலும் யுத்தத்தின் விளைவுகள் நம்மைப் பாதிப்பதாகவே இருக்கும்.

இந்த ஆபத்துக்காலத்தில் தனிப்பட்ட முறையில் நாம் என்ன செய்யலாம்? செய்யவேண்டும்?

யுத்தம் நின்று அமைதி ஏற்படவேண்டுமென்றும் ''சர்வே ஜனோ சுகினோ பவந்து'' (எல்லா மக்களும் சுகமாக வாழ வேண்டும்) என்று மன்முறையும் ஆண்டவனை உள்ளத்தால் பிரார்த்திக்க வேண்டுமென்பதே பெரியோர் காட்டிய வழி.

நம் மனமும் எந்தப் பக்கமும் சாராமல், ''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'' என்று நாம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் உண்மையில் பிரார்த்தனை செய்வதால்தான் நம்மன அமைதியையும் நாட்டின் அமைதியையும், ஒருவாறாகப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி [illegible] 1971 [illegible] பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org